# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
## கொழும்பு
*************

## ஊடக அறிக்கை

### இலங்கையின் சுற்றாடல் அமைச்சர்
### கௌரவ (டாக்டர்) தம்மிக பட்டபெந்தி அவர்களின் இந்திய விஜயம்
### (2026 பெப்ரவரி 24-27)

இலங்கை அரசாங்கத்தின் சுற்றாடல் அமைச்சர் கௌரவ (டாக்டர்) தம்மிக பட்டபெந்தி அவர்கள் புது டில்லியில் நடைபெற்ற 25 ஆவது உலக ஸ்திரமான அபிவிருத்தி மாநாடு (WSDS) 2026 இல் கலந்து கொள்வதற்காக 2026 பெப்ரவரி 24-27, வரை இந்தியாவிற்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்தார். இந்திய அரசின் சுற்றுச்சூழல், வன மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்துடன் (MoEFCC) இணைந்து எரிசக்தி மற்றும் வளங்கள் நிறுவனம் (TERI) இந்த மாநாட்டை ஏற்பாடு செய்தது. குறித்த மாநாடு "நிலைமாற்றங்கள்: தொலைநோக்கு, குரல்கள் மற்றும் ஸ்திரமான அபிவிருத்திக்கான மதிப்புகள்" என்ற தொனிப்பொருளில் நடைபெற்றது.

2. 2026 பெப்ரவரி 25 அன்று நடைபெற்ற மாநாட்டின் ஆரம்ப அமர்வில் கௌரவ அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டார். அத்துடன் 2026 பெப்ரவரி 26 ஆம் திகதி அன்று 'நம்பிக்கை மற்றும் விளைவுகளுக்கான ஒரு சக்தியாக பன்முகத்தன்மை' என்ற தலைப்பில் நடைபெற்ற அமைச்சர்கள் மட்டத்திலான விசேட அமர்விலும் அவர் கலந்துகொண்டிருந்தார்.

3. இம்மாநாட்டின் பக்க நிகழ்வாக, சுற்றுச்சூழல், காடுகள் மற்றும் காலநிலை மாற்றம் ஆகிய துறைகளில் இந்தியாவின் முக்கிய துறைகளையும் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்த ஒரு வட்டமேசை அமர்விலும் கௌரவ அமைச்சர் அவர்கள் பங்கேற்றார். இந்திய தொழில்துறை கூட்டமைப்பால் (CII) இந்த வட்டமேசை கலந்துரையாடல் ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததுடன், கொள்கை கட்டமைப்புகள், தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஸ்திரத்தன்மையினை மேம்படுத்துவதில் தனியார் துறை ஈடுபாடு குறித்த கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் இக்கலந்துரையாடல் ஒரு வாய்ப்பினை வழங்கியிருந்தது.

4. இவ்விஜயத்தின் அங்கமாக, குருகிராமில் அமைந்துள்ள TERI ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தையும் கௌரவ அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். இந்த விஜயம் TERI இன் உயிரி தொழில்நுட்ப மையம், நுண் பயிர் பெருக்க தொழில்நுட்ப பூங்கா, நொதிய தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம் மற்றும் ஏனைய வளர்ந்து வரும் தொழில்நுட்ப முயற்சிகள் தொடர்பான அனுபவங்களை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கியிருந்தது.

5. மேலும், சுற்றுச்சூழல், காலநிலை மாற்ற தணிப்பு, ஸ்திரமான அபிவிருத்தி மற்றும் பசுமை தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை இவ்விஜயம் மேலும் வலுப்படுத்துகின்றது.

*****************

கொழும்பு
01 மார்ச் 2026.